<u>பத்திரிக்கை செய்தி</u>

இன்று (04.02.2019) சென்னை, கே.கே.நகரைச் சேர்ந்த திரு.பா.பிரசாத் என்பவர் தனது அடுக்குமாடி குடியிருப்பிலுள்ள பழுதடைந்த 18 மின் மீட்டர்களை இடம் மாற்றிக் கொடுப்பதற்கு கே.கே.நகர் மேற்கு மின்வாரிய உதவி பொறியாளர் திரு.பூபாலன் அவர்களை அனுகியதாகவும் அப்போது அவரும் அவருடைய மின் வணிக ஆய்வாளர் திரு.பத்மநாபன் என்பவரும் இப்பணியை செய்து கொடுக்க ரூ.2000/- லஞ்சம் கேட்பதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு புகார் அளித்தார். அப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து பொறி வைத்துப் பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இன்று மாலை சுமார் 4.15 மணியளவில் புகார்தாரர் திரு.பா.பிரசாத் பணத்துடன் சென்று மேற்படி மின்வாரிய அலுவலர்களை பார்த்தபோது வணிக ஆய்வாளர் திரு.பத்மநாபன் பணத்தை கேட்டு வாங்கிக் கொண்டார். அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத்துறையினர் கையும் களவுமாக மேற்படி 2 மின்வாரிய அதிகாரிகளை பிடித்தனர். அவர்கள் இருவரும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட உள்ளனர். இவ்வழக்கு தொடர்பான புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.